மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் வைப்பது குறித்த கேள்வியினைக் குறித்து தனியாக எழுதினால், அதுபற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

168—(*வினா எண். 446) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சமீப ஆண்டுகளில் மத்திய அரசிடமிருந்து மானியமும் கடனும் பெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : (அ) தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மத்திய அரசிடமிருந்து மானியம் மற்றும் கடன் பெறவில்லை. மாநில அரசிடமிருந்து மானியம் மற்றும் கடன் பெறப்பட்டு இருக்கின்றது. பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நேரிடையாக கையாளும் எந்தத் திட்டமும் மத்தியஅரசினால் வகுக்கப்பட்டதல்ல.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

3. தகவல் கோரல்

(அ) சென்னை நகரில் குடி நீர் வழங்குவதில் உள்ள குறைபாடுகள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே கடுமையான குடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது அதனுடைய பிரதிபலிப்பாக இன்று நம்முடைய சட்டமன்ற வளாகத்திலே இருக்கின்ற குழாய்களிலே கூட தண்ணீர் வரவில்லை. இந்தக் குடி தண்ணீரை சென்னை நகரத்திலே லாரிகள் மூலமாக மெட்ரோ வாட்டர் விநியோகம் செய்து வருகிறது. அப்படி வழங்கப்படுகிற இடங்களில் குடம் ஒன்றுக்கு 10 காசு என்று சிலர் வசூலித்து வருகிறார்கள்.

1989 ஏப்ரல் 29] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

அதுமட்டுமல்ல. தண்ணீர் பிடிப்பதற்கு உரிமை வேண்டும் அல்லவா. அதற்கு ஒரு அட்டை வழங்கி அந்த அட்டை ஒன்றுக்கு 5 ரூபாய் என்று வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். சென்னை நகரத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே இது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. குறிப்பாக சைதாப்பேட்டைத் தொகுதியில், ஜாபர்கான்பேட்டையில், ஏழுமலை என்கிற நபர், பாரதி பிளாக், தி.மு.க. இளைஞர் அணி, சுந்திரமூர்த்தி தெரு, குடிநீர் வழங்கும் அட்டை என்கிற பெயராலே அந்த அட்டையைப் போட்டு, அந்த அட்டையை 5 ரூபாய்க்கு வாங்கிக் கொள்ள வேண்டும், பிறகு தண்ணீர் பிடிக்க, லைனில் வந்து நின்றால், 10 காசு ஒரு குடத்திற்குத் தரவேண்டும் என்று சொல்லி வசூலித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னதாக பெண்கள் அங்கே கொடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார்கள். யார் யாருக்கு எல்லாம் இந்த அட்டைகளை வழங்கவில்லையோ, அவர்கள் மீண்டும் சம்பளம் வாங்கியோ, அல்லது கூலி வாங்கியோ தந்து விடுகிறேன் என்று சொல்லியும் கூட, அந்த நபர் ஏற்றுக் கொள்ளாமல், அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அவர்கள் மீது புகார் கொடுத்து வழக்கை தாக்கல் செய்து, வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பல பெண்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இது போன்று பல பகுதிகளிலே நடைபெறுவதாக நான் அறிகிறேன். இன்னும் குடி தண்ணீர் முறையாக வழங்கப்படுவதற்கும், குடி தண்ணீர் வழங்கப்படுகின்ற இடங்களிலே இதுபோன்று முறைகேடுகள் நடைபெறாமல் இருப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதற்காக நான் இதை கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஏழுமலை என்பவருடைய பெயரே ஆடு திருடி ஏழுமலை. பலர் எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே வத்சலா, மகிளா, சாந்தி, பி.எஸ்.சி., ஆர்ட்ஸ் கிராஜுவேட் சுமதி, நீலா போன்றவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பெரிய அறிக்கையே உண்டா ? கவனத்திற்குத்தான் இதைக் கொண்டு வர வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பாஸ்கர் என்பவர் குறளோவியம் கண்ட கலைஞர் நற்பணி மன்றத்தினுடைய பொருளாளர். அவரே எழுதிக் கொடுத்திருக்கிறார். இது போன்ற நபர்களால் கழகத்திற்கு அவப் பெயர் ஏற்படுகிறது. எனவே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவரே கூட எழுதிக் கொடுத்திருக்கிறார். நடவடிக்கை எடுப்பதோடு மட்டும் நில்லாமல், இது போன்ற தவறுகள் இல்லாமல், அத்தனை பேருக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, மாநகராட்சியிலே இது போன்ற குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான பல்வேறு முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை இந்த அவையிலே அறிவித் திருக்கிறேன். நேற்று கூட இயக்குநருடன் தொடர்பு கொண்டு உடனடியாக லாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் சொல்லி, அதற்கான ஏற்பாடுகள் இன்று முதல் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. நிச்சயமாக இந்த வறட்சிக் காலத்தில் குடிநீர்ப் பிரச்சினை இந்த நகரத்திலே தெரியாத அளவிற்கு நடவடிக்கை களை இந்த அரசு மேற்கொள்ளும். மேலும் நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்ற குறிப்பிட்ட சில தகவல்கள் தவறாக இருக் கலாம். சில அரசியல் நோக்கங்களோடு அந்த இளைஞர் அணி யின் மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற எண்ணத்திலே கூட சொல்லப்பட்டிருக்கலாம். அவைகளையும் தீர விசாரித்து, நிச்சயமாக அது உண்மையாக இருக்குமானால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(ஆ) போராட்டம் நடத்தும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடன் நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலை களில் இருக்கக் கூடிய தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்யக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி ஒரு வேலை நிறுத்தம் வந்தால், அதிலுள்ள 35,000 தொழி லாளர்களும், கரும்பு வெட்டி அனுப்பக் கூடிய விவசாயிகளும், கரும்பு வெட்டக் கூடிய கூலிகளுமாக $3\frac{1}{2}$ இலட்சம் பேர்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு அடிப் படையான காரணம், அவர்களுடைய பழைய ஊதிய ஒப்பந்தம் 1985 ஜூன் மாதத்தோடு முடிவடைந்துவிட்டது. 4 ஆண்டு களாக புதிய ஊதிய உயர்வு எதுவும் கிடையாது. ஆனால் இடைக்கால நிவாரணமாக ஒரு சிறு தொகையை அவர்கள் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆளுநர் அரசு இருந்த போதிலிருந்தே பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்போது கூட பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு வந்த பிறகு 17-2-89-ல் தொழிலாளர் நல இலாக்காவிலிருந்து மார்ச் மாதம் 15 ஆம் தேதிக்குள் எப்படியும் அது முடிவடைந்து விட வேண்டுமென்று புரொசிடிங்ஸ் போட்ட பிறகும் கூட, அது முடிவடையவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இருந்தபோதி லும் கூட, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வராமல் இருப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இது பற்றி அண்மையில் பேசப்பட்டும், கிட்டத்தட்ட ஒரு முறிவு நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதற்கு அடிப்படையான காரணங்கள்,